[1969 பிப்ரவரி 24

திரு. எம். ஆர். கண்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிற்பேட்டைகளில் தனியார்கள் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து கட்டிடங்களைக் கட்டுகிறார்கள். அந்த நிலம் அவர்களுக்கு உரிமையாக்கப்படாததால் அவர்கள் தொழில் வளர்ச்சிக்காக அந்தக் கட்டிடத்தை வைத்து கடன் வாங்க முடியவில்லை. இந்த நிலைமையை மாற்றி அமைத்து, அவர்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு, அந்த நிலத்தை அவர்களுக்கு விற்பனை செய்வதற்கு வழி வகை செய்ய சர்க்கார் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

அண்ணமங்கலம் பெரிய ஏரி

*45 வினா.—**திரு. ரா. ரா. முனுசாமி** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம், மேல்மலையனூர் தொகுதியில் உள்ள அண்ணமங்கலம் கிராமத்தில் உள்ள பெரிய ஏரியை, தூர்ந்து விட்டபடியால், ஆழப்படுத்த உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) அவ்வித செயற்குறிப்பு ஏதுமில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

மஞ்சமலை ஓடைத் திட்டம்

*46 வினா.—**திரு. பி. எஸ். மணியன்** : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் வலையபட்டி அருகில் மஞ்சமலை ஓடைத் திட்டம் என்னும் அணைக்கட்டுக்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டதா?

(இ) ஆம் எனில், அதற்குக் காலதாமதம் ஏற்படுவதன் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. எஸ். மணியன் : இது போன்ற அணைக்கட்டு திட்டங்களில் ஒரு டன் உற்பத்திக்கு ரூ. 3,000-க்குக் குறைவாக செலவு செய்யவேண்டும் என்ற அரசாங்கத்தின் சட்டம் பல வருடங்களாக இருந்துகொண்டுவருகிறது. இது போன்ற நல்ல திட்டங்கள் பல ஓவர்-எஸ்டிமேட் என்ற காரணம் காட்டப்பட்டு, கைவிடப்படுகின்றன. இப்பொழுது உள்ள நிலவரத்தை ஒட்டி, ஒரு டன் உற்பத்திக்கு ரூ. 5,000 அல்லது ரூ. 6,000 செலவு செய்வதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.